அக்கரைப்பற்று மாநகர சபை
அம்பாரை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 04 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆதன வரி அறவீடு தொடர்பில் “கே” படிவத்தின் படி குறிப்பட்ட வருடத்திற்குரிய முழுவரிகளையும் ஜனவரி 31 ஆந்திகதிக்கு முன் செலுத்திய ஆதன உரிமையாளர்களிற்கு ஆதன வரித் தொகையில் மீளாய்வாண்டின் இறுதிவரை கொடுக்கப்பட்ட 10% கழிவு ரூபா 245,253 தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதிகளில் பல்வேறு நிறுவனங்களினால் அன்பளிப்புச் செய்யயப்பட்டு சபையில் பயன்படுத்தப்படும் 03 மோட்டார் லொறிகள், 05 உழவு இயந்திரங்களின் 03 தண்ணீர் பவுசர்கள் 01 JCB இயந்திரம் மற்றும் 05 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் போன்றவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) இறைச்சிக்கடை குத்தகையாளரிடமிருந்து பெறப்பட்ட மீளாய்வாண்டிற்கான குத்தகைத் தொகையின் அரைப்பங்கு ரூபா 85,000 தொகையினை வைப்புக்கணக்கில் இருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றத் தவறியதனால் அதே தொகையினால் மீளாய்வாண்டிற்கான வருமானமானது குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 145,575 பெறுமதியான மூன்று வகையான 384 மின்சார இருப்புப் பொருட்கள் இருப்புக் கணக்கிற்கு கொண்டு வரப்படாமையினால் அதே தொகையினால் ஆண்டிற்கான வருமான மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்கு

2012 மற்றும் 2013 ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 64,598 கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு இன்று வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | தொகை | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 பிரிவு 218 | - | நிர்வாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2017 ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயகக் சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நி.பி. 104 | 535,500 | 2012 ஆம் ஆண்டில் சபையிலிருந்து காணாமல் போன கணனிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்திற்கான காரணத்தினையும் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களையும் கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) நி.பி. 165(3) | 45,255 | 2014 ஆம் ஆண்டு கோழி இறைச்சிக் கடைக்காறர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 2 காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டு வங்கியினால் மறுக்கப்பட்டிருந்தமை தொடர்பில் சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ( iii) நி.பி. 371 | 106,003 | 06 ஆண்டுகளுக்கு முன்னர் சபை ஊழியர் மற்றும் ஒரு சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்ட இரு முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv).பி. 396 | 5,000 | 06 மாதங்களுக்கு மேலாக மாற்றப்படாத 01 காசோலை தொடர்பில் சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| (v)நி.பி. 571 | 3,595,067 | 02 தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சியுள்ள 22 மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | -- | மாநகர சபையானது நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து சேவைக்கட்டணங்களும் தண்டப் பணங்களும் மேற்படி கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுத்திருக்வில்லை. |
| (ii) 1989 ஏப்பிரல் 29 ஆந் திகதிய 02/1/10 ஆம் இலக்க சுற்றறிக்கை | -- | மீளாய்வாண்டில் மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பித்த 40 விண்ணப்பங்கள் பிரதேச சுகாதர வைத்திய அதிகாரியின் சிபாரிசு பெறப்படமால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 20,232,252 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 21,874,474 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,642,222 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 10,100 | 10,095 | 5,533 | 25,249 | 10,100 | 10,125 | 6,341 | 20,687 |
| (ii) வாடகை | 15,194 | 14,314 | 12,139 | 15,720 | 14,836 | 13,681 | 11,725 | 13,544 |
| (iii) உரிமைக் கட்டணம் | 2,650 | 1,751 | 1,751 | - | 1,950 | 2,313 | 2,313 | - |
| (iv) ஏனைய வருமானம் | 10,025 | 14,363 | 14,128 | 14,920 | 9,762 | 11,948 | 9,796 | 14,685 |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 89,439,165 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 33,550,447 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 38% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 ஆதன வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆதன வரி அறவிடு தொடர்பில் 2014 ஜனவரி 17 திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை இல 1846 பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியின் மதிப்பீட்டில் தொழிற்சாலைகளுக்கு 18 சதவீதமும் வியாபாரத் தலங்களுக்கு 14 சதவீதமும் குடிமனைகளுக்கு 10 சதவீதமும் மற்றும் கஸ்டப்பிரதேசங்களுக்கு 05 சதவீதமும் ஆண்டுக்கான ஆதன வரியாக அறவிடப்படவேண்டிய போதிலும், இன்றுவரை அனைத்துக்குமாக 10 சதவீமான வரித் தொகையே கணிப்பீடப்பட்டு அறவிடப்படுகின்றது.

(ஆ) சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் குடியிருக்கும் 12,873 குடியிருப்பாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படவேண்டிய ரூபா 30,686,921 கூட்டு மொத்தமான ஆதன வரிகளில் 18% ஆன ரூபா 5,437,782 தொகையான ஆதன வரிகளே மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருந்தது.

2.2.4 குத்தகை நிலுவை அறவீடு

1992 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி திகதிவரை அறவிடப்பட வேண்டிய குத்தகை நிலுவை ரூபா 14,014,705 தொகையில் 50% சதவீதமான ரூபா 7,046,200 நிலுவைத் தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாநகர சபையினால் உடல்வலுவூட்டல் திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உடற்பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் பயனடையும் அங்கத்தவர்களின் தேவைகளின் அடிப்படையில் நவீன உடல்வலுவூட்டல் இயந்திரங்களை தருவித்து சபையின் வருமானத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பேணப்படும் காசேட்டின்படி, வங்கியில் பொது நடைமுறைக் கணக்கில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 15.3 மில்லியன் முதல் ரூபா 18.9 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்பட்டன. இதனை வருமானம் உழைக்கும் அடிப்படையிலான வைப்புக்களில் முதலீடு செய்ய நடவடிக்கைகள் சபையினால் எடுத்திருக்கப்படாததால் அண்ணளவாக ரூபா 1,500,000 தொகையான வருமானத்தினை மீளாய்வாண்டில் இழந்துள்ளது.

(இ) மாநகர சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளில் 25 கடைகளுக்கான மின்சாரக்கட்டணம் கடையை வாடகைக்கு பெற்றவர்கள் செலுத்தவேண்டும் என அவர்களது ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரைக்குமான மின்சாரக் கட்டணம் ரூபா 125,760 தொகை சபை நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

3.2 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் தீயணைப்பு பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கென ரூபா 87,400,000 பெறுமதியில் நான்கு வாகனங்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட போதிலும், இப்பிரிவுக்கென அங்கீகரிக்கப்பட்ட 24 ஊழியர்களை நியமித்து இப்பிரிவினை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் சபையில் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களில் 55 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் அப் பதவிகளுக்கான பணிகளை முன்னொடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

(இ) மீளாய்வாண்டில் நிர்வாகப் பிரிவினுள் பணியாற்றுகின்ற 06 உத்தியோகத்தர்களிற்கான பணிப்பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் அவர்களின் பணிப் பொறுப்புக்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

(ஈ) சபையின் திட்டமிடல் பிரிவில் பணிபுரியும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் பணிகளை உரிய முறையில் மேற்பார்வை செய்தமையினை ஆதாரப்படுத்தக்கூடிய ஆவணங்களான வெளிக்கள வேலைப்பதிவேடு, தினமும் நிறைவேற்றப்பட்ட வேலைவிபரம் (Diary Extract) மற்றும் வேலை முன்வேலைத் திட்ட நிகழ்ச்சி நிரல் (Advance Programme) என்பன தயாரிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாநகர சபைக்கு சொந்தமான 107 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மூடப்பட்டுள்ளதுடன் இக் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மாநகர சபையின் நூலகங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 13.69 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் பொருத்துக்களும் 2017 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது நூலக வளாகத்தில் விளைவற்றுக் காணப்படுகின்றது.

(இ) சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 06 உழவு இயந்திரங்கள், 02 உழவு இயந்திர இழுவைப்பெட்டிகள், 01 டபிள்கெப் வாகனம் மற்றும் 01 எக்ஸ்கவேட்டர் உள்ளடங்களாக மொத்தம் 10 வாகனங்கள் திருத்தம் செய்யப்படாது மாநகர சபையில் நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |